بسم الله الرحمن الرحيم

# Friday Sermon

**14 DECEMBER 2018**

**(06 RABI'UL AAKHIR 1440 AH)**

**IN CALICUT, KERALA - INDIA**



**HAZRAT MUNIR AHMAD AZIM (A)**

**Nabiullah, Rassullullah, Khalifathullah, Waliullah**

**Al-Messih, Al-Mahdi, Mujaddid & Mohyiuddin**

# “FAITH & THE STRONG BELIEVER”

## “நம்பிக்கையும், வலுவான நம்பிக்கையாளரும்”

### TAMIL VERSION / தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! குழந்தைகளே, இன்றைய வெள்ளிக்கிழமை பேருரை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஈமான் மற்றும் இஸ்லாமைக் குறித்தும் அதோடு **வலுவான** நம்பிக்கையாளர் மற்றும் பலவீனமான நம்பிக்கையாளரைக் குறித்தும் இன்று நான் உங்களிடம் பேச விரும்புகிறேன்.

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான் **“நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம் என்று காட்டரபிகள் கூறுகின்றனர். நீர் கூறுவீராக! நீங்கள் (உண்மையிலேயே) நம்பிக்கை கொள்ளவில்லை. நாங்கள் (வெளிப்படையாக) கட்டுப்பட்டோம் என்று நீங்கள் கூறுங்கள். ஏனெனில் (உண்மையான) நம்பிக்கை இதுவரை உங்கள் உள்ளங்களில் நுழையவில்லை. (நம்பிக்கை கொண்டவர்களே) நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்தால், உங்கள் செயல்களுள் எதனையும் அவன் குறைத்து விடமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்”**. (49:15)

நிச்சயமாக ஈமான் என்பது நாவால் கூறுவதுடன் தனது செயல்களில் அதனை காட்டுதலாகும். இஸ்லாம் என்றால் சொற்களில் மட்டுமல்ல மாறாக செயல்களில் காண வேண்டும்.

“இக்காலகட்டத்தின் கலீ.ஃ.பத்துல்லாஹ்வை ஏற்றுக் கொண்டுள்ளோம்” என ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில்

ஒருங்கிணைந்திருப்பவர்கள் (முஸ்லீம்கள் என்ற நிலையில்) கூறுகின்றனர். அப்படியென்றால் அவர்கள் தங்களது இஸ்லாமை முழுமைப்படுத்தட்டும். அதாவது, அவர்களின் அன்றாட வாழ்க்கையில் தங்களது இஸ்லாமை நடைமுறைப்படுத்துவதற்கு அயராத முயற்சிகளை மேற்கொள்ளுபவராக இருக்க வேண்டும். இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்றவாறு உங்கள் வாழ்கையினை அமைத்துக் கொள்வதன் மூலம்தான் உண்மையான நம்பிக்கை உங்களின் இதயங்களில் நுழைகிறது. நீங்கள் அவ்வாறு செயல்படவில்லையென்றால் நேர் வழியிலிருந்து உங்கள் உள்ளம் தடுமாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு முஸ்லீம், முஸ்லீம் என நான் இங்கு குறிப்பிடுவது எனது தோழர்களையாகும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த உறுப்பினர்கள் எண்ணுகின்றனர். அதாவது **“தங்களது வாழ்கையில் அவர்கள் செய்வதெல்லாம் சரி”** என்றும், **“அது வழியாக அல்லாஹ்விடம் நெருக்கத்தை ஏற்படுத்தி விடலாம்”** என்றும் எண்ணுகின்றனர். ஆனால் அவர்கள் பல்வேறு முயர்ச்சிகளில் ஈடுப்பட்டிருந்த போதிலும் தங்களது முயற்சிகளில் வெற்றியினை பெற அவர்களுக்கு முடியாமலிருக்கிறது. அதனால் அவர்கள் அல்லாஹ்வின் இரக்கத்தின் மீது விரக்தியடைந்தவராக மாறுகின்றனர். அவர்கள் கைவிடப்பட்டனர் என அவர்கள் எண்ணுகின்றனர். தங்களது பாதுகாப்பற்ற மற்றும் சந்தேகங்கள் காரணமாக தொழுகையையும் அத்தோடு அனைத்து வகையான இறைவழிபாடுகளையும் விட்டு விடுகின்றனர். பாருங்கள் இது மிக தவறான ஒன்றாகும். உண்மையான நம்பிக்கையை பெற்றுக்கொள்வது எளிதான காரியமல்ல என்பதை இத்தகைய நபர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் பல்வேறு சோதனைகளை கடந்து செல்ல வேண்டும். பல்வேறு நெருப்பு குண்டுகளை தாண்டி செல்ல வேண்டும். அப்போதுதான் ஒரு உண்மையான மூ.ஃ.ம்மினீன் என்ற நிலையிலும், ஒரு நேர்மையான முஸ்லீம் என்ற நிலையிலும் அல்லாஹ்வின் முன்னால் அவர்கள் வெற்றியடைவார்கள்.



நினைவில் கொள்ளுங்கள், அல்லாஹ் எவர் ஒருவரை அதிகமளவில் நேசிக்கின்றானோ, அவரை அவன் அதிகமளவிற்கு சோதனைகளுக்கு ஆளாக்குகின்றான். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள், **“நம்பிக்கையாளரின் காரியம் எவ்வளவு அற்புதமானது. அவருடைய அனைத்து காரியங்களும் நல்ல முறையில்தான் அமைகிறது. இது நம்பிக்கையாளருக்கு மட்டும் பொருந்தும் ஒன்றாகும். அவருக்கு ஏதாவது நல்லது நிகழ்ந்தால், அவர் அதற்கு நன்றியுடையவராக இருக்கிறார். அது அவருக்கு நல்ல முறையில் அமைகிறது. அவருக்கு ஏதாவது மோசமாக நிகழ்ந்தால், அதை அவர் பொறுமையுடன் சந்திக்கின்றார். அதுவும் அவருக்கு நல்ல முறையில்தான் அமைகிறது”** (முஸ்லீம்).

அல்லாஹ்வின் நபிமார்களின் சிறந்த முறையிலான முன்மாதிரியை பாருங்கள். ஹஸ்ரத் ஈசா நபி (அலை) அவர்கள் சிலுவையில் மிக பொறுமையுடன் இருந்தார். மிக அதிகமளவு வேதனையை சந்தித்த போதிலும் அல்லாஹ்விடமான நம்பிக்கையை அவர் கைவிடவில்லை. தனது இறைப்பணியிலிருந்து அவர் திரும்பி செல்லவுமில்லை. ஹஸ்ரத் யூசுப் நபி (அலை) அவர்கள் குற்றவாளியில்லாமல் இருந்தபோதிலும் நீண்ட வருடங்கள் சிறையில் இருந்தார். அதையாவும் அவர் பொறுமையுடன் எதிர்க்கொண்டார்.

அந்நிலையிலும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மற்றொரு இடத்திற்கு நாடு கடத்தப்பட்டார். அல்லாஹ்வின் அருளால் அவர் திரும்ப வந்தார். அல்லாஹ்வின் தூதர் என்ற நிலையில் அவர் "ஃபிர்-அவ்னுக்கும் அவனது சீடர்களுக்கும் இறை கோபத்தைப் பற்றிய முன்னெச்சரிக்கையை விடுத்தார். பத்து கட்டளைகளை பெற்றுக் கொள்வதற்கு மூஸா (அலை) அவர்கள் சென்ற போது, அவர் முன்னிலையில்தான் அவருடைய மக்கள் உண்மையான பாதையிலிருந்து வழி தவறிவிட்டனர். அம்மக்கள் தங்கத்தைக் கொண்டு ஒரு கன்றுக்குட்டியை உருவாக்கி அதனை வழிப்பட ஆரம்பித்தனர். ஆனால் அல்லாஹ்விடமான ஆOமான நெருக்கம் காரணத்தால் எல்லா வகையான கவலைகளும் விலகி சென்றது. தனது மக்களை தவறான வழியிலிருந்து காப்பாற்றுவதற்கும், தனது இறைப்பணியை நிறைவேற்றுவதற்கும் அவருக்கு முடிந்தது. அவர் தொடர்ச்சியாக முயற்சிகளில் ஈடுப்பட்டிருந்தும் அவரது மக்கள் தங்களது வாழ்வியல் நடைமுறைகளில் விரக்தியடைந்தவர்களாக காணப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் தங்களது இஸ்லாம் மீது சந்தேகம் கொண்டிருந்தனர். உண்மையான ஒரு படைவீரர் என்ற நிலையிலும், அல்லாஹ்வின் தூதர் என்ற நிலையிலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அம்மக்களுக்கு மேன்மேலும் அறிவுரையளித்து வந்தார். தொடர்ந்து அம்மக்களுக்கு அவர் நேர்வழியினை காண்பித்தார்.

நீங்கள் புரிந்துக் கொள்ளுங்கள்! இக்காலகட்டத்தின் கலீஃபத்துல்லாஹ்வை நீங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால், நீங்கள் இந்த நேர்வழியில் உறுதியுடன் இருக்க வேண்டும். நேர்மையுடனும் அக்கரையுடனும் அல்லாஹ்விடமான உங்கள் கடமைகளையும், அவனது மார்க்கத்தின் மீதான உங்கள் கடமைகளையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறேயானால், நிச்சயமாக அல்லாஹ் உங்களை நேசிப்பான். அவன் உங்களை அதிகமளவு நேசிக்கும் போது உங்கள் வழியில் அதிகமளவு சோதனைகள் வரும். ஏன்? காரணம், நீங்கள் ஆன்மீகத்துறையில் மேன்மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என்று அவன் எண்ணுகின்றான்.

அதனால் உங்களின் வழியில் அதிகமளவுக்கு சோதனைகள் வருலாம். அதன் விளைவாக இவ்வுலக ஆசைகள் மீதான உங்கள் தொடர்பை நீங்கள் துண்டித்து விடுவீர்கள். அந்நிலையில் நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூறியவாறு இருப்பீர்கள். அல்லாஹ்விடமான உங்கள் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமும், ஒரு நேர்மையான முஸ்லீமாக நடந்துக் கொள்வதன் மூலமும்தான் உண்மையான நம்பிக்கையை உங்களிடம் வளர்க்க முடியும். அதாவது உங்கள் மனைகளில், உங்கள் பணியிடங்களில், உங்கள் நண்பர்களிடத்தில், உங்கள் குடும்ப உறுப்பினர்களிடத்தில், மட்டுமின்றி உங்கள் அன்றாட வாழ்க்கையில் இஸ்லாமை நடைமுறைப் படுத்துவதன் மூலமாகதான் உண்மையான நம்பிக்கையை வளர்க்க முடியும். அவ்வாறேயானால் அவனுடைய அருட்கொடைகளாகிய தெய்வீக அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகளைக் கொண்டு அவன் உங்களை உறுதிப்படுத்துவான். உங்களை சுற்றியுள்ள மக்களுக்கு இறை ஒளியை பகிர்ந்துக் கொள்வதற்கு எந்த அளவு நீங்கள் முயர்ச்சிக்கின்றீகளோ, அந்த அளவு நீங்கள் அல்லாஹ்விடம் நெருக்கமாக இருக்கின்றீர்கள் என புரிந்துக் கொள்ளுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் ஒவ்வொருவரும் சிறப்புமிக்கவர்களாவீர்கள். ஏனெனில் நீங்கள் உங்கள் நூற்றாண்டின் இறை தூதராகிய கலீ∴பத்துல்லாஹ்வை அங்கீகரித்து, அன்னாரை ஏற்றுக் கொண்டீர்கள். உங்களில் பெரும்பாலானோர் பலவகையான இறை அடையாளங்களை பெற்றுள்ளீர்கள். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் குடும்பத்தில் உறுப்பினர்களாக அல்லாஹ் உங்களை தேர்ந்தெடுத்திருக்கின்றான். இஸ்லாமை உன்னதமான நிலையில் எட்ட வைப்பதற்கான பொறுப்பு உங்களின் கரங்களிலாகும். இன்ஷா அல்லாஹ்! ஆகவே இந்த இலக்கை நிறைவேற்ற நீங்கள் அயராது உழைக்க வேண்டும். உழைப்பின்றி எதையும் செய்ய முடியாது, எதையும் அடைய முடியாது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஆன்மீக ஆற்றலை பெற வேண்டும். அது மூலம் நீங்கள் ஒவ்வொருவரும் வலுவான நம்பிக்கையாளராக மாற வேண்டும். **“நான் நம்பிக்கைக் கொள்கிறேன்”**

**“எனக்கு நம்பிக்கை உண்டு”** என உங்களில் பெரும்பாலானோர் கூறுவீர்கள். ஆனால் அவர்கள் பலவீனமான நம்பிக்கையாளர்களாக இருக்கின்றனர். ஏனெனில், ஒரு சோதனையை அவர்கள் சந்திக்கும் போது அல்லது ஒரு சந்தேகத்தை சாத்தான் அவர்களிடத்தில் எழுப்பும் போது இந்த பலவீனமான நம்பிக்கையாளர்களின் கால் தடுமாறுகிறது. அத்துடன் அவர்களடமிருந்து ஈமானும் அகன்று விடுகிறது. இஸ்லாமும் விலகி விடுகிறது.

ஹஸ்ரத் அபுகுஹைர (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கிறார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், **“வலுவான நம்பிக்கையாளர் பலவீனமான நம்பிக்கையாளரை விட அல்லாஹ்வுக்கு மிகவும் அன்பானவர். ஆனால் அவ்விருவரிலும் நன்மைகள் உள்ளன. உங்களுக்கு நன்மையை அளிப்பது எதுவோ அதன் மீது நீங்கள் ஆர்வமாகயிருங்கள். அல்லாஹ்வின் உதவியை நாடுங்கள் விரக்தியடையாதீர்கள். உங்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்ப்பட்டால், நான் அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால் இவ்வாறு நிகழ்ந்திருக்காது என நீங்கள் சொல்லாதீர்கள். மாறாக நீங்கள் இவ்வாறு சொல்லுங்கள், அல்லாஹ் நாடியதை அவன் விதித்துள்ளான். “இல்லாமல் இருந்திருந்தால்” என்ற சொல் சாத்தானுடைய செயலுக்கான வாசலை திறந்து வைப்பதாகும்”** (முஸ்லீம்).

பலவீனமான நம்பிக்கையாளரிடமும், வலுவான நம்பிக்கையாளரிடமும் நன்மை பொதுவாக காணப்படும் என்பது மேல் கூறிய ஹதீஸில் இருந்து புரிய வருகிறது. ஏனெனில் ஈமான் இருவருக்கும் பொதுவாக உள்ளன. வலுவான நம்பிக்கையாளர் என்றால், அல்லாஹ்விடம் ஆழமான நெருக்கத்தை ஏற்படுத்தியவராகவும் இருப்பார். ஏனெனில் அவர் உன்னதமான செயல்களில் ஈடுப்பட்டிருப்பதோடு சடங்குகள் சம்பந்தமான பிராத்தனைகள், பர்ஸ், சுன்னத் போன்ற தொழுகைகள், மற்று இபாதத்துகள் ஆகியவற்றை தவறவிடாமல் அதில் மிக சுறுசுறுப்புடையவராகவும், அல்லாஹ்விடம் ஆழமான தொடர்பை ஏற்ப்படுத்தியவராகவும் இருப்பார். அதனால் எவ்விதமான

சோதனைகளுக்கும் அவரை நேர்வழியிலிருந்து தடமாறிக் கொள்வதற்கு முடியாது.

அல்லாஹ்வின் அருளால், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் இத்தகைய வலுவான நம்பிக்கையாளர்களும் பலவீனமான நம்பிக்கையாளர்களுக்கும் உள்ளனர். அல்லாஹ்வின் மார்க்கத்தில் போதுமான நிலையில் செயல்படாமல் இருப்பவர்கள், அல்லாஹ்வின் வழியில் மிக ஆற்றலுடன் செயல்படாமல் இருப்பவர்கள் தங்களுக்கு தேவையான ஈமானை (நம்பிக்கையை) பெறவில்லை என்பதாகும். மிக வலுவான நிலையில் ஈமான் கொண்bருப்பவர்களிலிருந்து அதை அழிப்பதற்கு எவர் ஒருவருக்கும் முடியாது.

மிக துரதிருஷ்ட வசமான ஒரு காரிய என்னவென்றால், அதாவது இந்நூற்றாண்டின் இறையருள் கொடையிலிருந்து அநேக மக்களுக்கு அல்லாஹ் எண்ணற்ற அடையாளங்களை காண்பித்தான். அல்லது அல்லாஹ்விடமிருந்து ஒரு அடையாளமாவது பெற்றவர்கள் உள்ளன. அத்தகைய அடையாளங்களை பெற்ற மக்கள் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் ஒருங்கிணைந்திட முன்னோக்கி வந்தனர். அதை தொடர்ந்து அவர்களின் குடும்பத்தார்களுடையவும், உண்மையை நிராகரிப்பவர்களுடையவும் அழுத்தம் காரணமாக அவர்கள் தங்கள் முதுகுகளை திருப்பிக் கொண்டனர். தங்களது நம்பிக்கையை கைவிட்டுக் கொண்டனர். தங்கள் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையை (Bai – Ath) துண்டித்துவிட்டனர். இது அல்லாஹ்வின் பார்வையில் மிக தீவிரமானது.

நினைவு கொள்ளுங்கள். அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான். **“நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதனால், அவர்கள் விட்டுவிடப்படுவார்களென்றும், சோதனைக்காளாக்கப்படமாட்டார்களென்றும் மக்கள் எண்ணுகின்றனரா? அவர்களுக்கு முன்னிருந்தவர்களை நாம் சோதித்தோம். எனவே இப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் உண்மையாளர்களை வெளிப்படுத்துவான். மேலும் பொய்யர்களையும் நிச்சயமாக அவன் வெளிப்படுத்துவான் அல்லது தீய செயல்களை செய்பவர்கள் எம்மை**

**விட்டுத்தப்பியோடி விடுவார்களென்று அவர்கள் எண்ணுகின்றனரா? அவர்கள் எடுக்கும் முடிவு மிகத் தீயதே”** (29:3–5).

ஆகவே நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு சோதனைகளும் உங்களுக்கு ஒரு அருளாகும். அது ஒரு போதும் சாபமல்ல. அல்லாஹ்வின் வழியில் அயராது உழைப்பவர்களும், தங்களது அகந்தை மற்றும் உடல் உணர்ச்சிகளை எதிர்த்துப் போராடுபவர்களும், இஸ்லாம் மற்றும் ஈமானை ஒளிர வைப்பதற்காக உழைப்பவர்களும், பிற மக்கள் பின்வருமாறு ஒரு முன்மாதிரியாக திகழ்பவர்களும் எவர்களோ அவர்கள்தாம் அல்லாஹ்வின் முன்னால் வெற்றியடைந்தவர்கள். அவர்களின் வழியிலான பல்வேறு கஷ்டங்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் பிறகு ஒரு நல்ல தினம் வந்தடைகிறது. அந்நாளன்று அல்லாஹ் தனது மாபெரும் பரிசுகளை அவர்களுக்கு வழங்குவான். பூமியில் அவர்களின் இறுதி மூச்சு வரையில் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

திரு நபி (ஸல்) அவர்களின் நம்பிக்கை வாய்ந்த தோழரான ஒரு சிறிய அபூபக்கரைப் போன்றும், படைப்பினங்களுக்கு எதுவும் அஞ்சாத ஒரு சிறிய உமர்பாறூக்கைப் போன்றும் நீங்கள் செயல்படுங்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வரும் பொழுது சாத்தான் கூட அன்னாரின் பாதையிலிருந்து தடம் மாறி சென்றுவிடும். இந்த தோழர்கள் எவ்வளவு மகத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர். பெரும்பாலன மக்கள் அத்தகையில் தங்களது இதயங்களில் உண்மையான நம்பிக்கையை வளரச் செயதனர். அத்தகைய இதயங்களில் அல்லாஹ் தனது ஆட்சியினை ஏற்ப்படுத்திக்கொண்டான். அவர்கள் அருளுக்குரியவர்களாக பரிணமித்தனர். நீங்களும் அவர்களை போன்று மாறி விடுங்கள். இவ்வுலகிலும், நாளை மறுவுலகிலும்! எனது அன்பான தோழர்களே! அவநம்பிக்கையின் எந்த ஓர் அடையாளமும் உங்களிடம் இருக்கக் கூடாது. நீங்கள் அருளுக்குரியவர்களாகத்தான் இறுதி மூச்சு வரையில் இருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்!

**Translated by:**
*Azim Ahmad*
*Naib Amir*

*7339689239*

# ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala Contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu State, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**